அக்கா வீடு புதுமனை புகுவிழா.
நான் தான் முன்னின்று நடத்திக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை
எல்லாம் நல்ல படியாக முடிந்தது.
வேனில் திருமூர்த்தி அருவிக்குப் போய் குளித்தோம்..
நானும் என் மனைவியும் திரும்பி தூத்துக்குடிக்கு வர வேண்டியது
இரவு பஸ்ஸை பிடித்தால் தூங்கிக்கொண்டே போய் விடலாம்
பழனியில் இருந்து தூத்துக்குடிக்கு மதுரை வழி
10 மணிக்கு பஸ்ஸைப் பிடிக்க எண்ணம்
அக்கா பையன் வாய வச்சிட்டான்...
மாமா... நைட் பஸ்ஸில போகாதீங்க..
இப்பல்லாம் ஒரே ஆக்சிடென்டா இருக்கு... சன் டிவில நிதம்
அதத்தான் சொல்றான்..
அக்கா அவன் வாயப் பொத்துகிறாள்..
போற நேரத்துல அப்படியெல்லாம் சொல்லக்கூடாதுப்பா...
நல்லவார்த்த பேசணும்..
இருந்து போனாத்தான் என்ன தம்பி?... ஒரு நாள்ல என்ன ஆயிரப்போது?

ஆனா, எனக்கு ஒண்ணு தோணித்துன்னா உடனே செஞ்சு போடணும்..
விரு விருன்னு கிளம்புரேன்..

நைட் 10 மணி பஸ்ஸைப் பிடிச்சு மதுரைக்கு கிளம்பியாச்சு
நல்ல தூக்கம் வருது..
கண்டக்டர் சீட்டுக்கு பின்னாடி 2 பேர் சீட்டுல இடம் கிடைச்சுது..

ட்ரைவர் ரொம்ப மெதுவாத்தான் ஓட்டுதாரு...
என்ன என்னவோ சிந்தனைகளோடு, களைப்புடன் உறங்கிப் போனேன்

இடை இடையே கண்ண தொறந்து பார்க்கேன்...
மணி 1.00
கண்டக்டரும் நல்லா கோழித்தூக்கம் போடுதார்...
ட்ரைவர் வண்டிய ஓட்டுர மாதிரி இல்ல... பறக்குறாரு..
அவரும் பாதி தூக்கம் மாதிரி தெரியுது...
அதுக்கு வசதியா மெதுவா ஓட்டுதாரு...

எதுக்க அப்ப அப்ப லாரி, பஸ் எல்லாம் வருது, நம்ம பஸ்ஸின்
முன்னாடி - கண்ணாடில வெள்ளையா கண்ணே மறைக்கும் படி
ஒளியப்பாச்சுதுங்க..

திரும்பவும் தூங்கிட்டேன்..

தடும்.....

நான் கண்ண தொறக்கல்ல... ஏதோ ஆய் போச்சு...
நம சிவாய... நம சிவாய...

நெஞ்சுல வலி... [ரத்தம்?...இல்ல ட்ரையாத்தான் இருக்கு]

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

ஆ... அய்யோ... பெண்கள், குழந்தைகளின் அழுகுரல் கேட்கிறது..

நெஞ்சப் பிடிச்சுக்கிட்டே கண்ண முழிக்கிறேன்..

பெரிய மரத்தின் கிளை ஒண்ணு என் மார்பு பக்கம் வரை வந்து நிற்கிறது..

அய்யா பிழச்சது தெய்வாதீனம்.... எல்லாரும் சொல்றாங்க..

"அடிபட்டவங்கள்லாம் இறங்கி வாங்க [!!], ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போறோம்"...
கண்டக்டர் சொல்றார்...

என் மனைவி ரொம்ப தைரியம்...
ஒண்ணும் இல்ல... ஒண்ணும் இல்ல... எந்திரிங்க.. முட்டுல எதாச்சும்
அடி இருக்கா பாப்போம்..ங்கா

முட்டுப் பக்கம் கியர் போடுற சாதனம் [கம்பி] வளஞ்சு நிக்குது...

எல்லாம் ஓகே. எழுந்து நிக்கேன்...

அய்யோ.. என் மூக்கு போச்சே... மூக்கு போச்சே...
பின்னாடி ஒரு வயதான பெண்மணி அலறுகிறாள்...
பஸ் சாலையோர இடது புற மரத்தில் இடித்த வேகத்தில் அவளது
மூக்கு முன் சீட் கம்பியில் பட்டு ஒரே ரத்தம்..

சில பேருக்கு பல் போயிருக்கு...

ஆண்டவா!, காப்பாற்றியதற்கு நன்றி..

இனிம நைட் பஸ்ஸில ஒரு போதும் போக மாட்டெம்பா...

நிறையப் பேர் இறங்கி பக்கத்து ஆஸ்பத்திரிக்கு செல்கிறார்கள் [டாக்டர் இருப்பாரா?]

அவசர உதவி வேன் வந்து நிற்கிறது.. ஆனால்.. யாருக்கும் அவசர உதவி
செய்யிர மாதிரி தெரியவில்லை.

வாக்கி டாக்கியோடு மீட்பு வாகனமும் வந்துவிட்டது..
மதுரை-பழனி மெயின் ரோடு என்பதால..

இலவசமா அடுத்த பஸ்ஸில ஏத்தி விடுதாக...

உள் காயம் என்பதால், மனைவியை ஒரு பக்கம் பிடித்துக்கொண்டு
மாட்டுத்தாவணி [சீ.. என்ன பேரோ!] போறோம்...

புதுசு புதுசா மதுரையில பஸ்ஸ்டாண்டுங்க...

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

கஷ்டப்பட்டு நடந்து போகும் போது தான் தெரியுது உள் காயம் இருக்குன்னு...

தூத்துக்குடி வந்து இறங்கினா..
ஆட்டோல ஏறக் கூட தெம்பு இல்ல..

யப்பா, இனி சன்மத்துக்கும் பஸ்சுல போமாட்டேன்பா...
ட்ரெயினு தான்...

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com